## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 49/2016 |
| Deposition of witness for | Prosecution wit. PW.10 |
| Name | **இராஜ சுந்தர்** |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 12-12-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் தற்போது இராணிப்பேட்டை மாவட்டம் குற்ற ஆவண காப்பகத்தில் கண்காணிப்பாளராக பணி செய்து வருகிறேன்.

2. கடந்த 28.06.2015 ம் தேதி செய்துங்கநல்லூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்பரசி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று மேற்படி புகார் மனுவின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.149/15 u/Sec.279, 337,304(A) IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். இதன் அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இதர நகல்களை புலனாய்வு அதிகாரி என் வசம் ஒப்படைத்தார்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 28.06.2015 ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம்

சென்று சாட்சிகள் கனகராஜ் மற்றும் அந்தோணி பாக்கியராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 6** மற்றும் **அ.சா.ஆ 7** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் கனகராஜ், அந்தோணி பாக்கியராஜ், மல்லிகா, பாஸ்கர், அன்பரசி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் இறந்து போன கோயில்ராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டும் போது பின்னால் அவருடைய மனைவி அன்பரசி மற்றும் இரு குழந்தைகள் சுதா மற்றும் ராஜ் ஆகியோர் சென்ற போது விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக பின்னால் அமர்ந்து வந்த அன்பரசி, சுதா மற்றும் ராஜ் ஆகிய மூவருக்கும் காயம் ஏற்பட்டதால் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். காயம்பட்ட சுதா மற்றும் அன்பரசி ஆகியோரை சிகிச்சை அளித்த மருத்துவர் கிரண் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் அளித்த சுதா என்பவரின் விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 8** ஆகும். அவர் அளித்த அன்பரசி என்பவரின் விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 9** ஆகும். அவர் அளித்த ராஜ் என்பவரின் விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 10** ஆகும். மருத்துவர் கிரண் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. இவ்வழக்கில் வாகனத்தை ஓட்டி சென்ற கோயில் ராஜ் என்பவர் இறந்து போனதால் அவருடைய இறப்பு குறித்து பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேதய பரிசோதனை செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ. 11** ஆகும். பின்னர் இறப்பின் உண்மைத்தன்மையை கண்டறிய வேண்டி இறந்து போன கோயில் ராஜ் என்பவரை சிறப்பு உதவி ஆய்வாளர் செல்லத்துரை மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு மருத்துவர்

சீதாலெட்சுமி சடலக்கூறாய்வு செய்தார். சடலக்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ.12** ஆகும் .பின்னர் பிரேதய பரிசோதனை முடிந்த பின்னர் இறுதி சடங்கிற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

6. இவ்வழக்கின் எதிரி கடந்த 30.06.2015 ம் தேதி நிலையம் ஆஜரான செல்வக்குமாரை கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

7. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரிகள் மீது கடந்த 22.12.2015 ம் தேதி **நி.கு.எண்.149/15 u/Sec. 279, 337, 304(A) IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

7. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் திருச்செந்துார் – திருநெல்வேலி மெயின்ரோடு என்றால் சரிதான். சம்பவ இடம் யூனியன் ஆபிஸ் முன்னால் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடமான யூனியன் ஆபிஸ் முன்னால் 200 மீ தொலைவில் தான் சம்பவ இடம் என்றால் அரை கிமீ இருக்கும்.

8. சம்பவ இடத்தில் இருந்து காவல் குடியிருப்பு 100 மீ துாரம் என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகே கடைகள் மற்றும் பெட்ரோல் பங்க் இருக்கும் என்றால் சரியல்ல.

9. பெட்ரோல் பங்க் மற்றும்கடைகள் சம்பவ இடத்தில் இருந்து 100 மீ துாரத்தில் இருக்கும். பொதுவாக 100 மீ என்பது சத்தம் கேட்டால் வரக்கூடிய தொலைவு தான் என்றால் சரியல்ல .

10. சம்பவம் நடந்து சுமார் 6 மணி நேரம் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது இறந்து போன நபர் ஓட்டி வந்த வாகனம் TVS Excel என்றால் சரிதான். சம்பவ நடந்த

அன்று TVS Excel லில் 4 பேர் வந்ததாக இந்த வழக்கின் புகார் கொடுத்தவரே ஒத்துக்கொண்டுஉள்ளார் என்றால் சரிதான்.

11. பொதுவாக TVS Excel வாகனத்தில் 4 பேர் சேர்ந்து வருவது வாகனம் ஓட்டி வரும் நபருக்கு இடையூறாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்தில் சம்பவஇடம் குண்டும் குழியுமான ஒரு பகுதி என்றால் சரியல்ல.

12. யூனியன் ஆபிஸ்க்கு முன்புறம் வேகத்தடை போடப்பட்டு உள்ளது எனக்கு தெரியுமா என்றால் இது வரை போடப்படவில்லை. போட்டு உள்ளதும் எனக்கு தெரியாது. எனது விசாரணையில் சம்பவ நேரம் என்ன என்றால் 11.15 ஆகும்.

13. பிரேதய விசாரனை செய்த மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். எவ்வளவு நேரத்திற்கு முன்னர் இறந்து போன நபர் இறந்தார் என்று விசாரித்தேனா என்றால் நான் அது பற்றி கேட்கவில்லை.

14. இறந்து போன நபர் எந்த வகையான காயத்தால் இறந்து போனார் என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் தலையில் காயம் ஏற்பட்டு இறந்து போனார் என்று எனது விசாரணையில் துலங்கும்.

15. தலையில் காயம்பட்டு தான் இறந்து போனார் என்பதால் தலையில் எந்த பகுதியில் அடிப்பட்டது என்றால் பின்தலையில் அடிப்பட்டது. பின்தலையில் தான் அடிபட்டு இறந்து போனர் என்று மருத்துவர் எதில் கூறியுள்ளார் என்றால் மருத்துவர் அறிக்கையில் உள்ளது.

16. வழக்கின் முதல் தகவல் அறிக்கை யார் பதிவு செய்தார்கள் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் செல்லத்துரை ஆவார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் செல்லத்துரை என்பவரிடம் ஏன் காலத்தாமதம் என்று நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரிக்கவில்லை.

17. புலனாய்வு அதிகாரி 304(A) குற்றம் நடந்தால் எத்தனை மணிக்குள் சம்பவ இடத்திற்கு செல்லவேண்டும் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ஒரு மணி நேரம் அல்லது அரை மணி நேரத்தில் செல்ல வேண்டும்.

18. இந்த வழக்கின் சாட்சி 1 அவர் எந்த காரணத்திற்காக சம்பவ இடத்திற்கு வந்தார் யார் சொல்லி வந்தார் என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் TVS Excel லில் உடன் வந்தவர் ஆவார்.

19.இவ்வழக்கில் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக மதன் குமார் என்பவரிடம் கையொப்பம் வாங்கி உள்ளேன் அவர் யார் என்றால் இறந்தவருக்கு தம்பி முறை ஆவார்.

20. அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்த மதன் குமார் என்பவருக்கு இந்த வழக்கை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல . அவர் சம்பவத்தை நேரடியாக பார்த்துள்ளார்.

21. நேரடியாகபார்த்த மதன் குமார் என்பவரை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளனோ என்றால் விசாரித்துள்ளேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன் என்று அவர் 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

22. இந்த வழக்கில் விபத்துக்குள்ளான வாகனத்தை சம்பவ நாளிலில் இருந்து எவ்வளவு நாட்கள் கழித்து ஒப்படைத்தேன் என்றால் 3 நாட்கள் கழித்து ஒப்படைத்தேன்.

23. சம்பவ தேதி 28.06.2015 ஆகும். விபத்துக்குள்ளான வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைத்த தேதி 30.06.2015 ம் ஆகும். சம்பவம் நடந்து எத்தனை நாட்களுக்குள் RTO ஆபிசில் ஒப்படைக்க வேண்டும என்றால் அன்றைய நாளில் இருந்து ஒப்படைக்கலாம். ஆனால்

இந்த வழக்கை பொறுத்தவரை 3 நாட்கள் கழித்து ஒப்படைக்க காரணம் என்ன வென்றால் 3 நாட்கள் கழித்து ஒப்படைக்கலாம்.

24. 3 நாட்கள் காலத்தாமதத்தில் காவல் நிலையத்தில் வைத்து வாகன பாகத்தை மாற்ற வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை.

25. இந்த வழக்கில் விபத்துக்குள்ளாக்கிய வண்டியின் ஆவணங்கள் எல்லாமே சரியாகத்தான் உள்ளதா என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்கும். சரியாகத்தான் உள்ளது.

26. முதல் தகவல் அறிக்கையில் விபத்துக்குள்ளான வாகனத்தை TATA india என்று தான் குறிப்பிட்டு உள்ளேன் TATA *indigo* என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

27. இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தை சம்பவம் நடந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 1 மணி நேரத்தில் பதிவு செய்தேன். இந்த வழக்கில் இறந்து போன நபரில் குடும்ப உறுப்பினர்கதை தவிர வேறு யாரையும் தனிப்பட்ட சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் விசாரித்துள்ளேன். யார் என்றால் ஆல்பர்ட் ராஜன் என்பவரை விசாரித்துள்ளேன்.

28. இறந்து போன நபர் சம்பவஇடத்தில் வைத்து இறந்து போனரா அல்லது மருத்துவமனையில் வைத்து இறந்து போனரா என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் சிகிச்சை பலனின்றி இறந்து போனார்.

29. இறந்து போன நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் யாரையாவது விசாரித்துள்ளேனா என்றால் நான் விசாரிக்கவில்லை. indigo காரில் வேறு யாராவது பயணம் செய்ததாக எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது.

30. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்வம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அவர் ஓட்டி வந்த TVS Excel லில் 4 நபர் வந்ததால் தான் நிலை தடுமாறி கிழே விழுந்து விபத்து ஏற்பட்டதா என்றால் சரியல்ல. பின்னாடி வந்த எதிரிதான் கவனக்குறைவாக வாகனத்தை அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை